**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110266

1. District : தேனி
மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 5/2020
மு.த.அ. எண்
Date: 20.11.2020
நாள்

2. (i) Act சட்டம்: CrPC
Sections பிரிவுகள்: 102.
(ii) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 7.
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 19.11.2020
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 18.10 hrs
Time to : நேரம் வரை 21.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020
Time : நேரம் 10.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.11.2020
Time : நேரம் 11.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எந்திசையும் மேற்கு திசை சுமார் 25 கி.மீ தூரம்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் [illegible] ரோட்டில், சின்னமனூர் தேனி மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. செ. நாகேந்திரன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : திரு. செல்வ நாகேந்திரன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. V. பாலமுருகன், சார்பதிவாளர், சின்னமனூர். 2. திரு J. முருகன், உதவியாளர் 3. திரு. S. சுப்புராஜ் உதவியாளர். 4. திருமதி. P. [illegible] உதவியாளர் 5. திருமதி P. [illegible] இளநிலை உதவியாளர் 6. திரு. M. [illegible] அலுவலக உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம் சின்னமனூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......... பதவி .......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.11.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1400 hrs.

Name: பெயர் ..........
Rank: நிலை ..........No. எண் ..........

**Submitted:**

இன்று 19.11.2020-ம் தேதி மாலை 06.10 மணிக்கு காலம்-4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் தேனி மாவட்டம், கண்ணம்மா கார்டன், தேனி to கம்பம் மெயின்ரோடு, சின்னமனூரில், அரசு கட்டிடத்தில் இயங்கிவரும் சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு செய்யவரும் நபர்களிடமிருந்து பணம் பெறப்படுவதாக கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் சார் பதிவாளர் திரு.V.பாலமுருகன் அவர்கள் ஆஜரில் இருந்தார். அவரிடம் ஆய்வுக்குழு அலுவலர்கள் திரு.மு.தாஜுதீன் மற்றும் திரு.ஆர்.திருமலை ஆகியோர்கள், அவர்களையும் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டியையும் சோதனைக்காக வந்திருப்பதுபற்றி தெரிவித்து அறிமுகம் செய்து வைத்தார். சார்பதிவாளர் அலுவலகமானது தேனி to கம்பம் சாலையில் மேற்கு பார்த்து பிரதான வாசலிளிருந்து சுமார் 25 அடிதூரத்தில் வடக்கு பார்த்து வாசல் கொண்ட 60X10 அளவுள்ளதில், கீழ்தளம் மற்றும் முதல்தளம் கொண்டுள்ளதாக அலுவலகம் அமைந்துள்ளது. பத்திரபதிவு அலுவலகம் நான்கு புறங்களிலும் சுற்றுசுவர் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தின் வெளியே பிரதான வாயிலில் நுழைந்தவுடன் வலதுபுறம் Perfect என்ற பெயரில் ஜென்செட் அமைந்துள்ளது. கீழ்தளம் வடக்கு பார்த்து அமைந்துள்ள அலுவலக நுழைவு வாயிலின் நுழைந்தவுடன் அலுமினிய சட்டத்தினால் ஆன கண்ணாடி தடுப்புகள் கொண்ட சுமார் 10X10 அளவுள்ள அறை உள்ளது. அந்த அறையில் நுழைந்தவுடன் சுமார் 30X14 அளவுள்ள ஹால் அமைந்துள்ளது. அதில் வடக்கு நோக்கி கணினியுடன் கூடிய சார்பதிவாளர் மேஜை அமைந்துள்ளது. அதில் சார்பதிவாளர் அமர்ந்திருந்தார். அதற்கு கிழக்குபக்கம் கிழக்கு பார்த்து கணினியுடன் கூடிய புகைப்படம் எடுக்கும் மேஜை அமைந்துள்ளது. அதற்கு கிழக்காக 4X4 அளவுள்ள ஜன்னலுக்கு அருகில் ஒரு இரும்பு பிரோ உள்ளது. அதற்கு கிழக்கு 4X7 அளவுள்ள கழிப்பறையுடன் கூடிய குளியலறை அமைந்துள்ளது. அதற்கு வடக்கு பக்கம் உதவியாளர் திரு.சுப்புராஜ் இருக்கையுடன் கூடிய மேஜை அமைந்துள்ளது. அதற்கு அருகில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டுள்ள மரமேஜை உள்ளது. வடக்கே உள்ள சுவற்றில் அலுமினிய சட்டத்தினால் ஆன 4X4 அளவுள்ள கண்ணாடி ஜன்னல் அமைந்துள்ளது. அதனருகில் கணினியுடன் கூடிய மேஜை ஒன்று அமைந்துள்ளது. சார்பதிவாளர் மேஜைக்கு மேற்கு பக்கம் உதவியாளர் கவிதா அவர்களின் மேஜை அமைந்துள்ளது. அடுத்ததாக வடக்கு

பக்கம் உதவியாளர் திரு.J.முருகன் அவர்களின் மேஜை அமைந்துள்ளது. இரு உதவியாளர் மேஜைக்கு இடையில் ஒரு இரும்பு பீரோ உள்ளது. அதற்கு வடக்கு பக்கம் அலுமினிய சட்டத்தினால் ஆன 10X10 அளவுள்ள கண்ணாடி பொருத்தப்பட்டுள்ள அறை ஒன்று உள்ளது. பிரதான ஹாலின் மேற்கு பக்கம் 10X24 அளவுள்ள அலுமினிய சட்டத்தினால் ஆன கண்ணாடி பொருத்தப்பட்ட 4 கணினிகளுடன் கூடிய அறை ஒன்று உள்ளது. மேற்படி அலுவலகத்தில் சார் பதிவாளர் இருக்கையில் திரு.வி. பாலமுருகன், சார்பதிவாளர் அவர்களும். அவரது இருக்கைக்கு வலதுபக்கம் இருந்த போட்டோகிராபர் மேஜை இருக்கையில் செல்வி.கிருபா அவர்களும், உதவியாளர் இருக்கையில் திரு.முருகன் அவர்களும். மற்றொரு உதவியாளர் இருக்கையில் திரு.சுப்புராஜ் அவர்களும் இளநிலை உதவியாளர் இருக்கையில் திருமதி.மின்னல்கொடி அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அலுலவக உதவியாளர் திரு.முத்துகணேசன் மற்றும் டேட்டாஎன்டரி ஆப்ரேட்டர் அஸ்வின் ஆகியோர்கள் அலுவலகத்திற்குள் ஆஜரில் இருந்தார்கள், கணினி அறை காலியாக இருந்தது. மேற்படி அலுவலகத்தின் கீழ்தளத்தில் உள்ள அறைகள் மற்றும் பிரோ, மேஜை ஆகியவற்றை சோதனையிட பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அலுவலக நுழைவு வாயிலின் வடமேற்கு மூலையில் உள்ள அலுமினிய சட்டத்தினால் ஆன 10X10அளவுள்ள கண்ணாடி பொருத்தப்பட்டுள்ள அறையில் வடமேற்கு மூலையில் இருந்த இரும்பு பிரோவில் மரத்தினாலான கப்போர்டில் ஆறு கூண்டுகள் இருந்தது. அதில் நடுவிலிருந்த மேற்புற கூண்டில் நான்கு கட்டுகளாக பணம் வைக்கபட்டிருந்தது. முதல் கட்டு ரோஸ் கலர் இரப்பர் பேண்ட போடப்பட்டு அதில் ரூ.15,500/-ம், இரண்டாவது கட்டு வெள்ளை தாளில் சுற்றப்பட்டு பச்சை கலர் இரப்பர்பேண்ட் போடப்பட்டு அதில் ரூ.7,800/-ம், சுற்றப்பட்டிருந்த வெள்ளைத்தாளில் 19.11.2020 என்று தேதியிடப்பட்டு ஆவண எண்கள் எழுதப்பட்டு அதற்குரிய தொகையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டு இரப்பர்பேண்ட போடப்பட்டு அதில் ரூ.50,000/-ம் மற்றும் நான்காவதாக வெள்ளைநிற கவர் பின் போடப்பட்டிருந்ததை பிரித்து பார்த்ததில் அதில் ரூ.50,300/-ம் ஆக மொத்தம் ரூ.1,23,600/- இருந்தது கண்டறிப்பட்டது. இதனையடுத்து கீழ்தள ஹாலின் வடகிழக்கு மூலையில் முதல்தளத்திற்கு செல்லும் படிகட்டுக்கள் உள்ளது. அதன் வழியே முதல்தளத்திற்கு சென்றபோது படிக்கட்டின் வலதுபக்கம் மேற்கு பார்த்த 10X10 அளவுள்ள கழிப்பறையுடன் கூடிய வாஸ்பேஷின் ஒன்றும் அமைந்துள்ளது. அதனருகில் 3X4 கழிப்பறை ஒன்று தெற்கு பாாத்து அமைந்துள்ளது. அதனருகில் கிழக்கு மேற்காக 4X10 அடி அளவுள்ள ஹால் அமைந்துள்ளது. அதனருகில் 10X8 தெற்கு பார்த்து

உணவறை அமைந்துள்ளது. அதற்கு மேற்கு பக்கம் 5X18 அடி அளவுள்ள தெற்கு பார்த்தாற்போல் மூன்று அறைகள் அலுவலக பழைய ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் மேல்தளத்தில் உள்ள அறைகளில் சோதனை செய்ததில் பணம் ஏதும் காணப்படவில்லை. மேற்கண்டவாறு கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,23,600/- சம்மந்தமாக ஆஜரில் இருந்த அலுவலர்களிடம் விசாரிக்க அதற்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்தப்பணம் ரூ.1,23,600/- சந்தேகத்திற்கு இடமான கணக்கில் வராத பணமாகக் கருதி கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தினுள் ஆஜரில் இருந்த அலுவலர்களின வாக்குமூலங்களை ஆய்வுக்குழு அலுவலர் விசாரித்து தனித்தனியே பதிவு செய்தார். இவ்வலுவலகத்தில் மொத்தம் 30 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இதில் கிரைய ஆவணங்கள் 11, இரசீது ஆவணம் 6, கிரைய அக்ரிமென்ட் ஆவணங்கள் 1, செட்டில்மென்ட் ஆவணங்கள் 5, அக்ரிமென்ட் இரத்து ஆவணம் 1, உரிமை ஆவணம் (MOD) 2, பாகப்பிரிவினை பத்திரம் 2, அரசுக்கு தானம் 1 மற்றும் பாகம் விடுதலை ஆவணம் 1 ஆகியவை பதிவுசெய்ப்பட்டுள்ளது. இப்பதிவுகளுக்கு இணைவழியில் முத்திரை தீர்வை ரூ.20,380/-ம் மற்றும் இணைவழியில் பதிவுக்கட்டணம் ரூ.99,440/-ஆகும். இதில் வங்கிவரைவோலையாக எதுவும் இல்லை. இவைபோக அலுவலகத்தில் இருந்த பணம் சம்மந்தமாக சார்பதிவாளரிடம் கேட்டபொழுது சரியான பதில் ஏதும் தெரிவிக்காததால் இந்த பணம் லஞ்சப்பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக அலுவலர்கள் தாங்கள் கொண்டுவரும் பணத்தை பதிவு செய்வதற்கு தனியாக தினசரி பண கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படுகிறது. மேலும் மேற்படி ஆஜரிலிருந்த அலுவலர்கள் அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த பணம், தங்களது சொந்தப் பணம் என்று கூறியதின்பேரிலும், பதிவேட்டில் பதிவுசெய்துள்ளதாலும் அந்தப் பணம் அவர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் கொடிநாள் வசூல் இன்று (19.11.2020) ஏதும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நவம்பர் மாதத்திற்கான அலுவலகப் பணியாளர்கள் மற்றும் கணினி பிரிவு தற்காலிக பணியாளர்களுக்கான வருகைப் பதிவேடு நகல், தனிநபர் பண கையிருப்பு பதிவேடு நகல், 19.11.2020ம் தேதி பத்திரபதிவு "அ" பதிவேடு நகல், ஆகிய நகல்களில் மேற்படி அலுவலக சார்பதிவாளர், சின்னமனூர் அவர்களின் சான்றொப்பம் பெற்றும், அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,23,600/-யுடன் ஆவண எண் மற்றும் அதற்கான தொகை குறிப்பிடப்பட்டு பணம் சுற்றிவைக்கபபட்டிருந்த வெள்ளைத்தாளும் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆவணங்களைத்தவிர வேறு எந்தவித ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை. மேலும்

இச்சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இச்சோதனையின்போது இருந்த சின்னமனூர் சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மனரீதியாகவோ எவ்வித துன்புறுத்தல்களும் ஏற்படுத்தப்படவில்லை. திடீர் இணை ஆய்வு 19.11.2020ம் தேதி தேனி மாவட்டம் சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் மற்றும் தேனிமாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின்போது கணக்கில் வராத ரூ.1,23,600/- மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மேல்நடவடிக்கைகாக இக்கடிதம்மூலம் தங்களுக்கு அனுப்புகின்றேன். எனவே, மேற்படி சார்பதிவாளர் திரு.வி.பாலமுருகன் மற்றும் அலுவலர்கள்மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க தங்களிடம் அளிக்கின்றேன். ஒப்பம்/-XXXXX 20.11.2020 (மு.தாஜுதீன), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மதுரை.

Sir, Received the report today (20.11.2020) at 10.00 hrs along with Joint Surprise Check proceedings, dated: 19.11.2020, Statements, Seized Documents, Cash Rs.1,23,600/-. After obtaining permission from the Superior Officers, I (Tmt.R.Geetha, Inspector of Police, V&AC, Theni) registered a case in Theni V&AC Cr.No.05/2020 u/s.102CrPC and 7 of Prevention of Corruption Act – 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act—2018 on 20.11.2020 at 11.00 hrs Sd/-XXXXX (R.Geetha), Inspector of Police, V&AC, 20.11.2020.

The original FIR along with report of Tr.M.Thajudeen, Joint Surprise check proceedings dated.19.11.2020, submitted to the Hon'ble Special judge , Special Court for the Trial of cases under PC Act, Theni and other copies were sent to the officers concerned.